**தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டம்  - 2022**

-----------------------------------------------------------------------------------

தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆம் திகதிய 3027-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ii ஆம் உறுப்புரை 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தென்பகுதி நெடுஞ்சாலைக்கு இணைக்கப்பட்ட வீதிகளின் 33 கிலோமீற்றர்களை தரமுயர்த்தி புனரமைப்பதன் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,248 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,223 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 25 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 27 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி உரிமையாளர்களுக்கான ரூபா 1019 மில்லியன் நியதிச்சட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டமைக்காக செலுத்த வேண்டிய ரூபா 314 மில்லியன் தொகையான வட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 314 | காணி சுவீகரிப்பு இழப்பீடு (ரூபா 1.2 பில்லியன்) மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட உறுதிச்சீட்டுக்களின் செலுத்த வேண்டிய வட்டி (0.5 பில்லியன்) தொகை 2022 செப்தெம்பர் இறுதியளவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காணிப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு RDA நிதிக்கூற்றுக்களில் ஒரு பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல்களின் 4.3.1 ஆம் பிரிவு மற்றும் 2012 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய 2/2002 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | SRCP/CP - 5 பொதியின் பொறியியலாளர் மதிப்பீட்டில் உள்ள BOQ உருப்படிகளையும் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 21 இன் கீழ் உள்ள உருப்படிகளையும் ஒப்பிடும் போது ஒப்பந்தப் பொதிகளின் பொறியியலாளர் மதிப்பீடுகள் சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்காததன் காரணமாக ரூபா 324.94 மில்லியன் பெறுமதியான 32 வேலை உருப்படிகள் ஒப்பந்ததாரரால் முழுமையாக கலந்துகொள்ளப்படாமல் இருந்ததுடன் ரூபா 825.22 மில்லியன் பெறுமதியான 26 பணி உருப்படிகள் பகுதியளவில் கலந்துகொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பணியின் ஆரம்ப நோக்கெல்லைக்காக தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டின் பணி உருப்படிகளை முழுமையாகப் பெற முடியவில்லை. | பொறியியலாளர் மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 8.13.4 ஆம் பிரிவு | ரூபா 643.65 மில்லியன் பெறுமதியான 43 வேலை உருப்படிகள் BOQ இல் அங்கீகரிக்கப்பட்ட வேலை | ஆரம்ப ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டியதுடன் MPC மற்றும் ADB | BOQ ஐ சரியான முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அளவு வரம்புகளை மீறியுள்ளன. இதன் விளைவாக பெறுகை கையேட்டின் பிற்சேர்க்கை 14 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கப்பாட்டுடன் ஒப்பந்தத் தொகை திருத்தப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| **கூறு** | **செயற்பாடு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| ஒப்பந்தப் பொதி-05 | வீதி நிர்மாணம் | 100% | 86% | செயற்திட்ட நடவடிக்கைகளின் உண்மையான செயன்முன்னேற்றம் இலக்கிடப்பட்ட முன்னேற்றத்திற்குப் பின்னால் இருந்தது. | கொவிட் - 19 தொற்றுநோய், காணி சுவீகரிப்பிலுள்ள தாமதம், பொருளாதார நெருக்கடி மற்றும் நோக்கெல்லை மாற்றம். |

**முகாமைத்துவத்தின் பதில்** காணி சுவீகரிப்பிலுள்ள தாமதம், பொருளாதார நெருக்கடி மற்றும் நோக்கெல்லை மாற்றம் தவிர CP-05 ஒப்பந்த பொதியின் பௌதீக முன்னேற்றம் தாமதமானது முக்கியமாக கொவிட் 19 தொற்றுநோயால் ஏற்படுகிறது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** பணித் திட்டத்தின் பிரகாரம் வீதி புனரமைப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| **இல.** | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட செயற்பாட்டின் வெளியீடு மற்றும் விளைவுகளை அளவிடுவதற்கு KPI's நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்திட்டத்திலிருந்து பொதுமக்களிற்கான நலன்களின் மட்டத்தை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியாதிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட கிலோமீற்றரின் எண்ணிக்கை, மேற்கொள்ளப்பட்ட பாலங்கள்/ மதவுகளின் எண்ணிக்கை, மேற்கொள்ளப்பட்ட தடுப்புச் சுவரின் நீளம், மேற்கொள்ளப்பட்ட பாதையின் கிலோமீற்றரின் எண்ணிக்கை போன்ற | ”ஸ்மார்ட்” KPI's அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்திட்டத்தின் வெளியீடு ஆரம்ப நோக்கெல்லை தொடர்பாக அளவிடப்படுகிறது. | |
| (ஆ) | செயற்திட்டத்தின் திருத்தப்பட்ட நோக்கெல்லையின் பிரகாரம் கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டத்தில் உள்ள 06 தேசிய வீதிகளில் 45.77 கிலோமீற்றர் தூரத்தை புனரமைப்பதற்காக 05 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வீதி நிர்மாணப் பணிகளை அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. ஒப்பந்த பொதி-3 திட்டமிடப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தப் பொதிகள் (CP) 1, 2 மற்றும் 4 ஆகியவற்றின் நிர்மாண நடவடிக்கைகள் முறையே 248 நாட்கள், 534 நாட்கள் மற்றும் 689 நாட்கள் தாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. CP-1 முதல் CP-4 வரையிலான வீதிகள் கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக நூறு சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது என முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் CP-2, CP-3 மற்றும் CP-4 இல் மீதமுள்ள பணிகள் நிர்மாணத்தில் நோக்கெல்லை தொடர்ச்சியாக மாற்றப்பட்டதன் காரணமாக CP-5 பொதிக்கு சேர்க்கப்பட்டது. ஒப்பந்த பொதி - 5 இன் புனரமைப்பு பணிகள் 2020 பெப்ரவரி 29 இல் தொடங்கப்பட்டு 2021 நவம்பர் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 86 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரமே அறிக்கையிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் மீதிப் பணிகளுக்கான ரூபா 2,536 மில்லியன் தொகையான கிரயம் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு சுமத்தப்படும். இதற்கு மேலதிகமாக ஐ-வீதி செயற்திட்டத்தில் இருந்து பொதி-5 இன் மிகுதிப் பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், நிலுவை பணிகளுக்காக ஐ-வீதி செயற்திட்டத்துடன் உடன்படிக்கை எதுவும் நாளதுவரை காணப்படவில்லை. | B-084 வீதியின் 23+400 முதல் 28+180 வரையிலான வீதிப் பிரிவுகளின் மேற்பரப்பு மற்றும் மிகுதி நிர்மாணப் பணிகள் மற்றும் CP-2 இன் கீழ் A-004 வீதியின் 15+360 முதல் 16+280 வரையிலான வீதியின் அனைத்துப் பணிகளும் CP-5 இற்கு சேர்க்கப்பட்டன. எனினும், CP–3 மற்றும் CP–4 இன் மிகுதிப் பணி எதுவும் CP–5 இற்கு சேர்க்கப்படவில்லை. CP–5 பொதி 2020 பெப்ரவரி 29 இல் தொடங்கப்பட்டு 2022 நவம்பர் 15 இல் பூர்த்தி செய்யப்பட்டது. 2022 ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியதும், CP–5 செயற்திட்டம் மிகுதிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மீண்டும் வேலைகளைத் தொடங்கியது. | செயற்திட்ட நோக்கெல்லையின் பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கிருலப்பனை முதல் கொடகம வரையும் பாமன்கட முதல் பொகுனுவித்த வரையுமிலான 12.45 கிலோமீற்றர் நீளமான SRCP/CP 5 புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்ததாரர் 2020 | CP-5 பொதி 2020-02-29 இல் தொடங்கப்பட்டதுடன் கொவிட்-19 தொற்றுநோய் 2020 மார்ச் முதல் 2021 செப்தெம்பர் வரை | மேலதிக கிரயத்தை குறைப்பதற்கு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி 29 இல் ரூபா 4,215 மில்லியன் கிரயத்தில் தொடங்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 21 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தத்தின் ஒப்பந்ததாரர் நிபந்தனைக்கு 853 நாட்கள் கால நீட்டிப்பு வழங்குவதன் மூலம் 2022 யூன் 30 வரை செயற்திட்டத்தால் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்ததாரர் 177 நாட்கள் கால நீட்டிப்புக்கான கிரயம் தொடர்பாக ரூபா 160 மில்லியனைக் கோரியிருந்தமையும், ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றலை கருத்தில் கொள்ளாமல் செயற்திட்டமானது அந்தக் கோரிக்கையை அங்கீகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | இலங்கையில் பரவியதால் இந்த செயற்திட்டம் ஒப்பந்ததாரருக்கு EOT ஐ வழங்க வேண்டியிருந்தது. ஏனெனில் ஒப்பந்த காலம் தொழில்தருநர் மற்றும் ஒப்பந்ததாரர் இருவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2022 மே 17 ஆம் திகதிய வேறுபாட்டு அங்கீகார கடிதத்தின் பிரகாரம் வேறுபாட்டு வரம்பின் மொத்த தொகை ரூபா 519 மில்லியனாக அங்கீகரிக்கப்பட்டது, எனினும் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் இல. 21 இன் பிரகாரம் (CP-5) செயற்திட்டமானது ரூபா 525 மில்லியன் உண்மையான வேறுபாட்டை மேற்கொண்டிருந்தது. இதன் காரணமாக ஒப்பந்த நிர்வாகத்தின் பலவீனம் காரணமாக உண்மையான வேறுபாட்டு தொகையானது ரூபா 5.57 மில்லியனால் அங்கீகரிக்கப்பட்ட வேறுபாட்டு வரம்பை விஞ்சியுள்ளது. | இணங்கப்பட்டது.<br><br>வேறுபாட்டு கட்டளைகளின் பணிகள் மேற்கொள்ளப்படும் போது சில மதிப்பிடப்பட்ட அளவுகள் மீறப்பட்டுள்ளன. | அங்கீகரிக்கப்பட்ட வேறுபாட்டு வரம்புகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | SRCP/CP-3 வெளியிட்ட ஒப்பந்ததாரர் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் இல. 29 ரூபா 248.6 மில்லியன் கொடுப்பனவுக்காக 2019 யூன் 24 இல் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் செயற்திட்டம் 3 ஆண்டுகள் தாமதத்துடன் 2022 யூலை 05 இல் அந்தத் தொகையை தீர்ப்பனவு செய்திருந்தது. இதன் விளைவாக ஒப்பந்ததாரர் தாமதமான காலத்திற்கு ரூபா 46.9 மில்லியன் வட்டியை கோரியிருந்தார். ஒப்பந்ததாரர் கொடுப்பனவில் ஏற்பட்ட தாமதமானது செயற்திட்டக் கிரயம் அதிகமாக ஏற்படுவதற்கு தாக்கம் செலுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது.<br><br>நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சில நடைமுறைத் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்ட நோக்கெல்லை மாற்றத்திற்கு வழிவகுக்கிறது. எனவே இது தொடர்பாக ஒப்பந்தத் தொகை மாற்றப்பட வேண்டியிருந்தது. | காலதாமதக் கட்டணங்களை செலுத்தாமல் உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான 1,562 காணித்துண்டுகள் உட்பட 8,499 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிட்டிருந்ததுடன், அதில் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ரூபா 8,249 மில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுக்களின் தீர்மானத்தின் கீழ் ரூபா 3,223 மில்லியன் தொகையான மேலதிகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2022 திசெம்பர் 31 வரை இழப்பீட்டை கொடுப்பனவு செய்வதில் உள்ள தாமதம் தொடர்பான வட்டியாக ரூபா 899 மில்லியன் தொகை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், நிலுவையாக உள்ள உறுதிச்சீட்டுக்களின் ரூபா 1714 மில்லியன் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் RDA இடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், காணி சுவீகரிப்பு செயன்முறையின் மோசமான மேற்பார்வை காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் எந்த காணித்துண்டும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படவில்லை.<br><br>எனினும், இழப்பீட்டை தீர்ப்பனவு செய்வதில் உள்ள தாமதங்கள் தொடர்பான வட்டிக்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 403.09 மில்லியன் ஆகும். காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் காணித் துண்டுகளை பதிவு செய்தல் காணி அமைச்சுடன் இணைந்து பிரதேச செயலக அலுவலகத்தில் இடம்பெற்று வருகின்றன. காணி சுவீகரிப்பு செயன்முறை பல அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்குகிறதுடன் ஒரு வரம்பிற்கு அப்பால் செயற்திட்டத்தால் அவற்றை பணிக்க முடியாது. | மேலதிக கிரயத்தை குறைப்பதற்கு இழப்பீடு வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இச் செயற்திட்டம் 8,503 காணித் துண்டுகளை சுவீகரித்திருந்த போதிலும், சில காணித் துண்டுகள் (கிருலப்பன முதல் ஹோமாகம வரை) நிர்மாணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை. | இணங்கப்பட்டது.<br><br>காணி சுவீகரிப்பு தொடங்கப்பட்டவுடன், அசல் உரிமையாளர்களுக்கு அவர்களின் இணக்கப்பாட்டுடன் திரும்பப் பெறாமல் குறுக்கிட முடியாது. | பயன்பாடற்ற காணித் துண்டுகளை வேறு வகையில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 கள விஜயங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| SRCP/ CP-5 பொதியின் கீழ் மின்சார இணைப்புக்கள் மற்றும் தொலைபேசி இணைப்புக்களை இடமாற்றம் செய்வதற்கு முறையே இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஆகியவற்றிற்கு முறையே ரூபா 93.95 மில்லியன் மற்றும் ரூபா 43.24 மில்லியனை செயற்திட்டம் செலுத்தியிருந்த போதிலும் CEB இன் 65 சதவீத மின் கம்பங்கள் மற்றும் 26 சதவீத மின்மாற்றிகள் ஆகியவற்றின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் SLT இன் தொலைபேசிக் கம்பங்களில் 74 சதவீதமான பணிகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் செயற்திட்டமானது முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 36.8 மில்லியன் BOQ தொகைக்கு மேல் ரூபா 100 மில்லியனை செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது.<br><br>CEB மற்றும் SLT ஆகிய இரண்டிற்குமான மொத்த மதிப்பிடப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் வரை கொடுக்கப்பட்ட பணி நோக்கெல்லைக்கான ஒப்பந்தத்திற்காக அவர்கள் வேலையைத் தொடங்க மாட்டார்கள். | கால எல்லைக்குள் பணிகளை பூர்த்தி செய்வதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

### 3.5 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை ஐ.அ.டொலர் 70 மில்லியனிற்கு 2014 மே 27 இல் கைச்சாத்திடப்பட்டு 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்தது, எனினும், செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக நிதியளிக்கும் முகவராண்மையால் கடன் இறுதி திகதி 2022 திசெம்பர் 31 வரை பல தடவை நீடிக்கப்பட்டது. கடன் இறுதி திகதி நிதி முகவராண்மையால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ வினைத்திறனின்மை காரணமாக கடன் காலாவதியாகுவதற்கு முன்னர் செயற்திட்டம் மொத்தக் கடன் வசதியைப் பயன்படுத்தத் தவறியிருந்தது. ரூபா 478 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.32 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்காதமை கவனிக்கப்பட்டது. | கடன் மீதியைப் பயன்படுத்துவதற்கு ADB அங்கீகாரம் அளித்திருந்த போதிலும் 2022-06-30 வரையிலான பணிகளுக்கு இது பொருந்தும் என்ற நிபந்தனை, கடன் வழங்குவதற்கான காலம் 2022-12-31 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வசதியைக் கட்டுப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக ஐ.அ.டொலர் 1.32 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாமல் கடன் நிறுத்தப்பட்டது. | கடன் வசதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக ரூபா 316.13 மில்லியன் கொடுப்பனவு மீதி காணப்பட்ட போதிலும் மீதமுள்ள கட்டுநிதி மீதியில் இருந்து அந்தத் தொகையை செயற்திட்டம் தீர்ப்பனவு செய்யத் தவறியதால் மீதமாகவுள்ள ரூபா 154.76 மில்லியன் மொத்தக் கட்டுநிதி கடன் வழங்கும் முகவராண்மைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது.<br><br>ADB கடன் நீடிப்பை நிராகரித்த பின்னர் வழங்கப்படாத கடன் மீதி ADB இற்கு மீளளிக்கப்பட வேண்டும். | கடன் வசதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மூலதனச் செலவின வாக்குப்பண இல. 117-2-4-43-2105-17 இன் கீழ் ரூபா 727 மில்லியன் GOSL ஒதுக்கீட்டில் ரூபா 126 மில்லியனை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்ததுடன் 83 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 601 மில்லியன் ஒதுக்கீடு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 30 மில்லியன் மீளளிக்க்கூடிய வெளிநாட்டு உதவிக்கான ஒதுக்கீட்டில் செயற்திட்டமானது ரூபா 23 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்தமையும் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 6 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. எனவே செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யப்படாத பணிகளின் கிரயம் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு சுமையாக இருக்கும். | 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 727 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் காணி சுவீகரிப்பு தொடர்பான கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு ரூபா 120 மில்லியன் கட்டுநிதி மாத்திரமே பெறப்பட்டதுடன் ஆண்டிற்காக மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி வாக்குப்பணத்திற்கான (117-2-4-43-2506-14) ஒதுக்கீடுகள் ரூபா 30 மில்லியனானதுடன் ரூபா 23.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. 2022 யூன் மாதத்தில் கடன் நிறுத்தப்பட்டதால் ஆறு மாதங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தக்கூடிய இந்த வாக்குப்பணம் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. | மொத்த ஒதுக்கீட்டை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முழுக் கடன் தொகைக்கும் ரூபா 311 மில்லியன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணமாகச் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது, எனினும் ஐ.அ.டொலர் 70 மில்லியன் தொகையான மொத்தக் கடனில் ஐ.அ.டொலர் 1.32 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்காது கடனளிக்கும் முகவரிற்கு மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பயன்படுத்தப்படாத கடன் தொகைக்காக ரூபா 5.8 மில்லியன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களாக ADB ரூபா 311 மில்லியனை அறவிட்டுள்ளது. இது கடன் நிபந்தனையாக உள்ளதுடன் கடன் வழங்கும் போது இணங்கப்பட்டிருந்தது. கடன் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறதா இல்லையா என்பதைக் கருத்தில் கொள்ளாமல் 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்தத் தொகை முழுமையாக அறவிடப்பட வேண்டியுள்ளது. | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஒப்பந்தப் பொதி 5 இற்கு உரிய ரூபா 210 மில்லியன் தொகையான நிறுத்திவைத்தல் பணம் ஏற்கனவே ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த பொதியின் நிலுவையாகவுள்ள பணிகள் ஐ-வீதி செயற்திட்டத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | SRCP கடனை மூடுவதற்கு இணையாக CP-5 பொதியை பூர்த்தி செய்தல் ஒப்பந்ததாரரின் தீர்மானமல்லாத போதிலும் அது தொழில்தருநரின் தீர்மானமாகும். நிறுத்திவைத்தல் பணத்தைத் தக்கவைப்பதற்கு ஒப்பந்தக் கடப்பாடு எதுவும் அங்கே காணப்படவில்லை. | பூர்த்தியாக்கல் அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 யூன் 19 இல் சமர்ப்பிக்கப்பட்ட IPC 15 இன் கீழ் ஒப்பந்தப் பொதி-1 இல் இருந்து அறவிடப்பட்ட ரூபா 31.95 மில்லியன் தொகையான காலதாமத சேதங்கள் ஒப்பந்ததாரருக்கு 2019 ஒக்தோபர் 10 இல் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 14.14 மில்லியன் தொகையான தாமத சேதங்கள் ஒப்பந்தப் பொதி - 4 இல் இருந்து கழிக்கப்பட்டு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. தாமத சேதங்களை விடுவித்தல் கணக்காய்வின் போது பிரச்சனைக்குரிய விடயமாக இருந்தது. | சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து EOT இற்கான முறையான அங்கீகாரத்துடன், CP-1 பொதியின் அறவிடப்பட்ட தாமதக் கட்டணங்கள் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தன. CP-4 பொதியின் ஒப்பந்ததாரர் EOT இற்காக இன்னும் மேன்முறையீடு செய்திருக்கவில்லை, எனவே பொறியியலாளர் கழித்த தாமத சேதங்கள் ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் தாமத சேதங்களை கோருவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |